# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு - 2011 -2012

# வளர் தமிழ் 5

சுட்டெண்:...................................................... நேரம்: 120 மணித்துளிகள்

**1) அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களில் மிகப்பொருத்தமானதைத் தெரிந்து, கீறிட்ட இடங்களில் எழுதுக.**

1. உலகெங்கும் பரந்து சென்றதால் பாண்டியருக்குப் ______________________ என்ற பெயரும் உண்டு. ( தமிழர், பாண்டியவர், பரதவர் )

2. தமிழில் உள்ள முதலெழுத்துகளின் எண்ணிக்கை. ______________________ ஆகும். ( 12, 30, 18 )

3. தை பிறந்தால் __________________________பிறக்கும். ( வளி, வலி, வழி )

4. தீயவர்கள் நண்பராக அமைந்தால் ________________________________ விளையும். ( நன்மை, இடுக்கண், மகிழ்ச்சி )

5. பூம்புகாரின் பொற்றொடி என அழைக்கப்பட்டவள் _________________________ (மாதவி, கண்ணகி, மணிமேகலை )

6. குறள்: செய்க __________________________ செறுநர் செருக்கறுக்கும்
   எஃகதனிற் கூரியது இல்.
   ( பொருளைச், பணத்தைச், செருக்கைச் )

7. தமிழர்கள் அரேபியாவிலிருந்து ___________________________ இறக்குமதி செய்தனர். ( முத்து, அரிசியை, குதிரையை )

8. தமிழர்களால் ஆடிப்பிறப்பு ____________________________________.
   ( கொண்டாடுவர் , கொண்டாடுகின்றனர், கொண்டாடப்படும் )

9. தொட்டில் பழக்கம் ________________ மட்டும்.

( வீடு, காடு, சுடுகாடு )

10. தஞ்சைப் பெருங்கோவிலைக் கட்டிய மன்னன் ________________.

( இராஜேந்திரசோழன், மாமல்லன், இராஜராஜசோழன் )

11. ஒற்றுமையாக வாழ்ந்திட்டால் உலகில் ________________ கண்டிடலாம்.

( தாழ்வு, தீமை, ஏற்றம் )

12. நாளை மாதவி பாட்டுப் ________________.

( பாடுவாள், பாடினாள், பாடுகின்றாள் )

13. வான்குருவி என அழைக்கப்படுவது ________________

( சிட்டுக்குருவி, தேன்குருவி, தூக்கணாங்குருவி )

14. முக்கனிகள் எனப்படுபவை ________________

( மா பலா வாழை, பலா வாழை கொய்யா, பலா முந்திரிகை வாழை)

15. பூஞ்சோலை என்பதை பிரித்து எழுதினால் ________________

( பூஞ் + சோலை, பூ + ஞ்சோலை, பூ + சோலை )

16. தம்பியின் இதயம் பயத்தினால் ________________ என்று அடித்தது.

( கடகட, படபட, மடமட )

17. ஆடற்கலை பற்றி விரிவாகக் கூறும் நூல் ________________.

( சிலப்பதிகாரம், மணிமேகலை, நன்னூல் )

18. தைத்திருநாள் ________________ போற்றி வாழ்ந்த தமிழருடைய சிந்தனை வளர்ச்சியால் உருவான நாளாகும்.

( செயற்கையைப், உணவைப், இயற்கையைப் )

19. பொங்கலன்று ________________ நீராடிப் புத்தாடை புனைவர்.

( வைகறையில், நண்பகலில், மாலையில் )

20. ________________என்பது வேந்தர்களுக்கும் மன்னர்களுக்குமாக ஆடப்பட்ட கலை.

( பொதுவியல், வேத்தியல், தொடரியல் )

21. பவளக்கொடி எனும் பாடலைப் பாடியவர் ________________.

( சின்னத்தம்பிப் புலவர், சோமசுந்தரப் புலவர், காளமேகப் புலவர் )

22. இது அழகான பூங்கா. ________________இருக்கும் பூக்கள் அழகானவை.

( இங்கே , எங்கே, அங்கே )

23. ______________ கடல்களில் கப்பல்கள் செல்லமாட்டா.
( ஆழமான, ஆழமற்ற, ஆழிக் )

24. இசை + கருவி என்பதை சேர்த்து எழுதினால் ______________.
( இசைச்கருவி, இசைக்கருவி, இசைகருவி )

25. உலகப் படைப்புகள் ______________முதலாகக் கொண்டவை.
( சந்திரனை, வானத்தை, கதிரவனை )

26. குயிலி பாட்டுப் ______________ அவையோரைக் கவர்ந்தாள்.
( பாடி, பாடிய, பாடும் )

27. நீரில் செல்லும் கலத்தை ______________ என அழைப்பர்.
( தொடருந்து, விண்ணுந்து, நீருந்து )

28. ______________ எல்லோரும் கலைவிழாவிற்கு வரவேண்டும்.
( நீங்கள், நீ, நான் )

29. குளத்தில் மலரும் பூக்களில் ஒன்று ______________
( மல்லிகை, ஆம்பல், முல்லை )

30. கண் இழந்தவர்களும் கண்டு உணரக் கூடிய கலை ______________.
( சிற்பக்கலை, ஓவியக்கலை, நடனக்கலை )

(புள்ளிகள் 30)

## 2) கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லை எழுதி, சொல்லியங்களை நிறைவு செய்க.

| | | |
|---|---|---|
| தொடர்ந்து | திறம்படச் | |
| வேகத்தோடு | வெற்றி | அஞ்சாது |

விடாமுயற்சி என்பது அச்செயலைத் தொடர்ந்து தீவிர ______________ செய்தல் ஆகும். அடிக்கு மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்னும் பழமொழிக்கு அமைய, எந்த ஒரு கடினமான காரியத்தைக் கூடத் ______________ செய்தால் நிச்சயமாக ______________ கிட்டும். எக்காரியத்தையும் செய்வதற்கு முன் எண்ணிப் பார்க்க வேண்டும். பின்பு அக்காரியத்தைச் செய்யும் போது எவ்வகையான இடையூறுகள் வந்தாலும் ______________துணிந்து நின்று செய்தல் வேண்டும். மாணவர்கள் ஆகிய நாம் எமது திறமைகளை வெளிக்காட்டக் கிடைக்கும் வாய்ப்புக்களான தேர்வுகளைத் ______________ செய்து, எமது விடாமுயற்சியை வெளிக்காட்டுதல் வேண்டும்.

(புள்ளிகள் 10)

## 3) பொருத்தமான சொற்றொடரைத் தெரிந்து, கீறிட்ட இடங்களில் எழுதுக.

| | | |
|---|---|---|
| ஏறஇறங்க | தாவித்தாவி | கையும்மெய்யுமாக |
| கலீர்கலீரென | அல்லும்பகலும் | |

1. கள்வனைக் ______________ மடக்கிப் பிடித்தனர்.
2. ______________ச் சலங்கைச் சத்தம் கேட்டது.
3. கண்ணன் ______________ வேலை செய்தான்.
4. குரங்குகள் மரத்திற்கு மரம் ______________விளையாடின.
5. வீட்டிற்கு வந்த முதியவரை தங்கை ______________ப் பார்த்தாள்

(புள்ளிகள் 05)

## 4) தரப்பட்டுள்ள சொல்லியங்களை உமது வாழிட மொழியில் எழுதுக.

1. நாங்கள் எங்கள் தாய்மொழியைக் கற்க வேண்டும்.

______________________________

______________________________

2. பிறருக்கு உதவுவோம்.

______________________________

______________________________

3. நாங்கள் என்றும் இனிய சொற்களைப் பேசுவோம்.

______________________________

______________________________

4. வானவில்லில் ஏழு நிறங்கள் உண்டு.

______________________________

______________________________

5. ஈபிள் கோபுரம் இரும்பு ஆணிகளால் உருவாக்கப்பட்டது.

______________________________

______________________________

(புள்ளிகள் 05)

## 5) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

ஒரு காட்டில் ஒரு வேடன் வாழ்ந்து வந்தான். பக்கத்தில் தினைகள் விளைந்திருந்த ஒரு வெளி இருந்தது. அவ்வெளியில் புறாக்கள் வந்து தினைகளை உண்டு வந்தன. இதைக் கவனித்த வேடன் அப்புறாக்களைப் பிடிக்கத் திட்டம் போட்டான். அதனால் தினைகளின் மேல் வலையைப் போட்டான். அதை அறியாத புறாக்கள் வழமை போல தினையை உண்ண அதன் மேல் இருந்தன. இருந்ததும் அவை வலையில் சிக்கின. சிக்குண்ட புறாக்கள் கத்தியபடி வலையிலிருந்து வெளியே வர முயன்றன. ஆனால் முடியவில்லை. வேடன் வரப்போகின்றான் என்பதை உணர்ந்த புறாக்கள் அச்சமடைந்தன. அப்போது அவ்வழியே காகம் ஒன்று பறந்து வந்தது. அது புறாக்களுக்கு உதவ விரும்பியது. நண்பர்களே அதோ வேடன் வருகிறான்: தப்பிப் பறவுங்கள் என்றது. வலையில் மாட்டி உள்ளோம்: தப்பிப் பறக்க முடியாது என்றன புறாக்கள். நீங்கள் யாருக்கும் தீங்கு செய்யாத நல்ல பறவைகள். எல்லோரும் ஒற்றுமையாகச் சேர்ந்து வலையைத் தூக்கிக்கொண்டு பறவுங்கள் என்றது. அதன்படி புறாக்கள் ஒன்று சேர்ந்து வலையுடன் பறந்தன. அதைக் கண்ட வேடன் ஏமாற்றத்துடன் நின்றான்.

1. வேடன் எங்கே வாழ்ந்து வந்தான்?

_______________________________________________

_______________________________________________

2. புறாக்களைப் பிடிக்க வேடன் என்ன செய்தான் ?

_______________________________________________

_______________________________________________

3. புறாக்களுக்கு அறிவுரை கூறிய பறவை எது?

_______________________________________________

_______________________________________________

4. புறாக்கள் எவ்வாறு பறந்து சென்றன?

_______________________________________________

_______________________________________________

5. புறாக்கள் தப்பிப் பறந்ததற்குக் கரணியம் என்ன ?

_______________________________________________

_______________________________________________

(புள்ளிகள் 10)

## 6) பாடலை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

சுத்தமுள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு நீ -அதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே!
கூழை நீ குடித்தாலும்
குளித்த பிறகு குடியப்பா!
ஏழையே நீ ஆனாலும்
இரவில் நன்றாய் உறங்கப்பா!
அருமை உடலின் நலமெல்லாம்
அடையும் வழிகள் அறிவாயே!
வருமுன் நோயைக் காப்பாயே!
வையம் புகழ வாழ்வாயே!

1. சுகம் எங்கே இருக்கிறது ?

______________________________

______________________________

2. ஏழையாக இருந்தாலும் இரவில் என்ன செய்ய வேண்டும்?

______________________________

______________________________

3. கூழைக் குடிக்க முன்னர் என்ன செய்ய வேண்டும் என்று கூறப்படுகிறது?

______________________________

______________________________

4. எது வராமல் உடலைக் காக்க வேண்டும்?

______________________________

______________________________

5. எதிர்ப்பொருள் தருக.

இரவு - ______________________

ஏழை - ______________________

(புள்ளிகள் 10)

**7. பாடநூல் வினா - ஐந்து வினாக்களுக்கும் விடை தருக.**

1. இவ்வுலகிற்கு கதிரவன் செய்யும் நன்மைகள் எவை ?

2. மாமல்ல புரத்தைச் சிற்பக் காடாக்கிய மன்னன் யார்?

3. பண்டைத் தமிழர்கள் ஏற்றுமதி செய்த பொருட்கள் இரண்டு தருக.

4. ‘ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு’ என்ற பழமொழி குறித்து நிற்பது யாது?

5. ஆடற்கலையின் இரு பிரிவுகளும் எவை?

(புள்ளிகள் 15)

**8) தரப்பட்ட தலைப்புகளிலிருந்து 60 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரையொன்று எழுதுக.**

1. ஒற்றுமையே வலிமை என்ற பாடத்தை உமது உரை நடையில் கதையாக எழுதுக.

2. தமிழர் தொல்வணிகம்

3. பனிகாலம்.

(புள்ளிகள் 15)